டிஜிட்டல் டெய்லி
# அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 17.09.2026 வியாழக்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 075- Madurai | Online Edition

# தமிழக மாவட்டங்களில் கனமழை நீடிக்கும்! வானிலை மையம் எச்சரிக்கை!!

சென்னை, செப்.16

தெற்கு உள் கர்நாடகா முதல் தென்மேற்கு வங்கக்கடல் வரை நிலவும் காற்றழுத்தத் தாழ்வுப் பாதையின் தாக்கம் காரணமாக, தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் பலத்த காற்றுடன் கனமழை பெய்யக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இன்று (செப்.17) நீலகிரி, கோயம்புத்தூர், கரூர், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், அரியலூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கனமழை பெய்யக்கூடும் எனவும், தமிழகத்தின் பிற பகுதிகள், புதுச்சேரி மற்றும் காரைக்காலில் சில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

மேலும், சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங் களில் சில இடங்களில் இடி, மின்னலுடன் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மதுரை மீனாட்சி அம்மன் கோவில் கும்பாபிஷேகத்தை காண வருகை தரும் அனைவரையும் வரவேற்கிறோம்.
இறை பணியில்
கல்யாண் ஜுவல்லர்ஸ்
மேல மாசி வீதி, மதுரை
KALYAN JEWELLERS



# தலைவாசல் வட்டாரத்தில் வேளாண்மை இணை இயக்குனர் ஆய்வு

## அக்டோபர் 31-க்குள் பயிர் காப்பீடு செய்ய அறிவுறுத்தல்



சேலம், செப்.16

சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டாரத்தில் வேளாண்மைத் துறை மூலம் செயல்படுத்தப் பட்டு வரும் திட்டங்களை மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சீனிவாசன் நேரில் ஆய்வு செய்தார்.

நத்தக்கரை கிராமத்தில் நுண்ணீர் பாசனத் திட்டம் மற்றும் பசுந்தாள் உர விநியோகத்தையும், நாவக்குறிச்சியில் பனை விதைகள் நடவுப் பணியையும் பார்வையிட்டார். மேலும், தியாகனூரில் நிலக்கடலை செயல் விளக்கத் திடலை ஆய்வு செய்ததுடன், பயிர் சாகுபடி கணக்கெடுப்புப் பணியை விரைந்து முடிக்க அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

அப்போது பேசிய அவர், பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் சிறப்புப் பருவத்தில் பயிரிட்டுள்ள விவசாயிகள் மக்காச்சோளத்திற்கு ஏக்கருக்கு ரூ.491, நெல்லுக்கு ரூ.580 மற்றும் பருத்திக்கு ரூ.691 செலுத்தி, வருகிற அக்டோபர் 31-க்குள் பயிர் காப்பீடு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.

இந்த ஆய்வின் போது வேளாண்மை உதவி இயக்குனர் வேல்முருகன், வேளாண்மை அலுவலர் ஜானகி, உதவி வேளாண்மை அலுவலர்கள் மற்றும் ஆத்மா திட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# முந்திரி சாகுபடியில் மேம்படுத்தபட்ட உற்பத்தி மற்றும் அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி



கடலூர், செப்.16

கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வேளாண் அறிவியல் நிலையத்தில் 16.09.26 அன்று முந்திரி சாகுபடியில் மேம்படுத்தபட்ட உற்பத்தி மற்றும் அறுவடைக்கு பிந்தைய தொழில்நுட்ப குறித்த பயிற்சி திருச்சி துவாக்குடி தமிழ்நாடு பாசன மேலாண்மை பயிற்சி நிலையத்தின் சார்பாக கடலூர் மாவட்ட விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டது. பயிற்சி ஒருங்கிணைப்பாளர் அக்ரி உமா மகேஸ்வரி வரவேற்புரை வழங்கினார். வேளாண்மை அறிவியல் நிலைய மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் க.நடராஜன், இப்பயிற்சியினை துவக்கி வைத்து கடலூர் மாவட்டத்திற்கு ஏற்ற அதிக மகசூல் தரும் முந்திரி ரகங்கள் மற்றும் முந்திரி கன்று களை தேர்வு செய்யும் முறைகள் குறித்தும் விளக்கினார். மேலும் முனைவர் எஸ்.சிவசங்கர், தோட்டக்கலை வல்லுநர், முந்திரியில் ஒட்டு கட்டுதல் செய்முறை பயிற்சி மற்றும் முந்திரி மரங்களை தாக்கும் தண்டு துளைப்பான் மற்றும் தேயிலை கொசு தாக்கம் மற்றும் அதனை கட்டுப்படுத்தும் முறைகள் பற்றியும் தெளிவாக விளக்கினார். மேலும் முனைவர் கலைச் செல்வி, முந்திரி மரங்களின் இடையில் ஊடுபயிர்கள் சாகுபடி செய்து வருமான இரட்டிப்பு பற்றியும் களை மேம்பாடு குறித்தும் விளக்கினார். எஸ்.கமலக்கண்ணன், முந்திரியில் உர மேலாண் மற்றும் மண் வளம் பாதுகாத்தல் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தார். இறுதியாக முந்திரியில் மதிப்பு கூட்டுதல் பற்றிய பயிற்சியினை முனைவர் சத்திய நாராயணன், விரிவாக விளக்கினார். பயிற்சியின் போது முனைவர் த.சுஜய்வேலு, வேளாண் விரிவாக்க வல்லுனர் மற்றும் வேளாண் அறிவியல் நிலைய அலுவலக உதவியாளர்கள் உடன் இருந்தனர். மேலும் பயிற்சியில் கடலூர் மாவட்ட விவசாயிகள் 40க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

## சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# வகை வகையான சூப் தொடர்...

# சூப் செய்வது எப்படி?

**40. துளசி சூப்**

**தேவையான பொருட்கள்**

துளசி இலை — 15

பூண்டு — 3 பல்

மிளகு — 1 டீஸ்பூன்

உப்பு — தேவையான அளவு

**செய்முறை**

அனைத்தையும் சேர்த்து 10 நிமிடம் கொதிக்க வைத்து வடிகட்டி பரிமாறவும்.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

நாளை தொடரும்...



# நெல் சாகுபடிக்கேற்ற இயற்கை வேளாண் தொழில்நுட்பங்கள்

பாரம்பரிய இரகங்களின் குணாதிசியங்களை அறிந்த விவசாயிகள் அதனை பயிரிடும் இயற்கை வேளாண் தொழில் நுட்பங்களை தெரிந்து கொண்டு சாகுபடி செய்ய வேண்டும்.

இயற்கை சாகுபடி முறையில் உற்பத்தி செய்யப்பட்ட பாரம்பரிய நெல் ரக விதைகளை தேர்ந்தெடுத்த விவசாயிகள் விதை நேர்த்தி செய்வதற்கு இரசாயன பூச்சிக்கொல்லிகளை தவிர்த்து உயிர் உரங்கள் மற்றும் தாவரம் சார்ந்த பொருள்களை பயன்படுத்த வேண்டும். ஒரு கிலோ விதைக்கு 20 கிராம் அசோஸ்பைரில்லம், 10 கிராம் பாஸ்போபாக்டீரியா மற்றும் 10 கிராம் சூடோமோனாஸ் என்றளவில் உபயோகித்து விதை நேர்த்தி செய்தல் வேண்டும். இயற்கை முறையில் விவசாயம் மேற்கொள்ளும் விவசாயிகள் விதைகளை பசு மாட்டுசானம் 5 கிலோ, பசு மாட்டுக் கோமியம் 5 லிட்டர், சுத்த சுண்ணாம்பு 50 கிராம், ஜீவனுள்ள மண் ஒரு கைப்பிடி அளவு ஆகியவைகளை 20 லிட்டர். தண்ணீரில் கலந்து தயாரிக் கப்படும் கரைசலில் விதை நேர்த்தி செய்யவேண்டிய விதைகளை 2 மணி நேரம் ஊறவைத்து பின் விதைக்கவேண்டும்.

நடவு வயலில் கடைசி உழவின்போது ஒரு ஏக்கருக்கு 5 டன்கள் தொழு உரம் இடவேண்டும் அல்லது நடவு வயலில் நடுவதற்கு முன்பு பசுந்தாள் உரப்பயிர்களான தக்கைப்பூண்டு, சணப்பை, கொளுஞ்சி விதைகளை 20 கிலோ விதைத்து பிறகு 45 நாட்கள் கழித்து பூக்கும் தருணத்தில் மடக்கி உழுதல் வேண்டும். அவ்வாறு செய்யும் போது சுமார் 10 டன்கள் வரை பசுந்தாள் உரம் கிடைப்ப தோடு 50-80 கிலோ வரை தழைச்சத்தும் கிடைக்கிறது. பண்ணையில் காணப்படும் வேம்பு, புங்கம், கிளைரிசிடியா, செஸ் பானியா மற்றும் சூபாபுல் மரத்தின் சிறு கிளைகளை ஒடித்து வந்து சரியான ஈரப்பதத்தில் நிலத்தில் நன்கு மக்கும்படி மடக்கி உழ வேண்டும். பசுந்தாள் உரப்பியர்களை வளர்க்க முடியாவிட்டால் ஒரு ஏக்கருக்கு 5 டன்கள் மண்புழு உரம் போடலாம். சூடோமோனாஸ் உயிர் பூஞ்சானக் கொல்லியினை ஏக்கருக்கு 1 கிலோ என்ற அளவில் 20 கிலோ தொழு உரத்துடன் கலந்து நடவு வயலில் நடுவதற்கு முன்பாக இடவேண்டும். நடவு வயலில் அசோஸ்பை ரில்லம் 10 பாக்கெட் மற்றும் பாஸ்போ பாக்டீரியா 10 பாக்கெட் ஆகியவற்றை 25 கிலோ தொழு உரத்துடன் கலந்து இடவேண்டும்.

அசோலா உயிர் உரத்தினை ஒரு ஏக்கருக்கு 100 கிலோ என்ற அளவில் நடவு செய்த 3 முதல் 5 நாட்களுக்குள் இட்டு நன்கு வளர்ந்த

அசோலாவை (20 நாள் கழித்து) கோனோவீடர் மூலம் நன்கு அமுக்கி விடுவதால் வயல்களுக்கு தழைச்சத்து உரமாக கிடைக்கிறது.

களை எடுக்கும் கருவிகளான கோனோவீடர் அல்லது ரோட்டரி கருவி ஆகியவற்றைக் கொண்டு நடவு செய்த 15 நாள் முதல் 10 நாட்களுக்கு ஒருமுறை களை எடுக்கவேண்டும். அவ்வாறு செய்வதால் களைகள் குறைந்து, மண் காற்றோட்டமடைவதுடன் வேரின் வளர்ச்சியும் அதிகரிக்கிறது. நடவு வயலில் மேலுரமாக ஒரு ஏக்கருக்கு வேப்பம்புண்ணாக்கு 50 கிலோவை பயிர் தூர்கட்டும் பருவத்தில் போடவேண்டும்.

**பயிர் பாதுகாப்பு முறைகள் :** இயற்கை நெல் சாகுபடியில் பூச்சி மற்றும் நோய் மேலாண்மை ஒரு சவாலாக விளங்குகிறது. அப்படி இருந்த போதிலும் இரசாயன பூச்சிக்கொல்லி அல்லாத ஒருங் கிணைந்த பயிர்பாதுகாப்பு முறைகளை ஆரம்பத்திலிருந்து ஒழுங்காக கடைப்பிடிப்பதால் பூச்சி மற்றும் நோய்களை வெகுவாகக் கட்டுப்படுத்தலாம். கோடை உழவு செய்வதால் மண்ணில் உள்ள பூச்சிகளின் கூட்டுப்புழுக்கள் அழிக்கப்படுகின்றன. வரப்பில் உள்ள களைகளை சுத்தமாக வைத்திருக்கவேண்டும். இனக்கவர்ச்சி பொறி மற்றும் விளக்குப்பொறி வைத்து பூச்சிகளின் நடமாட்டம் மற்றும் எண்ணிக்கையை கண்காணித்து தகுந்த கட்டுப்பாடு முறைகளை கையாளுதல் வேண்டும்.

இயற்கை முறையில் கிடைக்கக்கூடிய தாவர வகை பூச்சி மருந்துகள் மற்றும் உயிரியல் பூச்சி மற்றும் நோய் கட்டுப்பாடு காரணிகளை பயன்படுத்தி கட்டுப்படுத்தலாம். பசுவிலிருந்து கிடைக்கக் கூடிய ஐந்து பொருட்களான சாணம், சிறுநீர், பால், தயிர் மற்றும் நெய் ஆகியவற்றைக் கொண்டு தயாரிக்கப்படும் பஞ்ச கவ்யா கரைசலை (3 சதம்) இலைவழி ஊட்டமாக தெளிக்க வேண்டும். பாரம்பரிய இரகங்களை பொறுத்தமட்டில் விவசாயிகளே விதைகளை சொந்தமாக உற்பத்தி செய்து பயன்படுத்தி வரு கிறார்கள். மேலும் மற்ற விவசாயிகளுக்கும் வழங்கி வருகிறார்கள்.

எனவே விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த மற்றும் விதைக் கும் பாரம்பரிய நெல் இரகங்களின் முளைப்புத்திறன் அறிந்து விதைப்பு மேற்கொள்வது மிகவும் இன்றியமையாததாகும். நெற் பயிரை பொருத்தவரை 80% சதவீத முளைப்புத்திறன் அவசியம். முளைப்புத்திறன் அறிந்து விதைப்பதால் சரியான பயிர் எண்ணிக் கையை பராமரித்து அதிக மகசூல் பெறலாம். புறத்தூய்மை, ஈரப்பதம் மற்றும் முளைப்புத்திறன் ஆகியவற்றை மிகத் துல்லிய மாக அறிந்து கொள்ள எண்.15–பி, பெரியமில் தெரு, விஜயபுரம், திருவாரூர் என்ற முகவரியில் செயல்படும் திருவாரூர் மாவட்ட விதைப்பரிசோதனை நிலையத்தை அணுகி பயன் பெறலாம்.

ஆகவே உரிய பருவங்களில் விவசாயிகள் தங்கள் வயல் சூழ்நிலைக்கும், விருப்பத்திற்கும், ஏற்ற பாரம்பரிய இரகங்களைத் தேர்வு செய்து விதையின் தரத்தினை திருவாரூர் மாவட்ட விதைப் பரிசோதனை நிலையத்தில் உறுதி செய்து, பரிந்துரைக்கப்படும் இயற்கை வேளாண்மை சாகுபடி தொழில்நுட்பங்களைக் கடை பிடித்து அதிக விளைச்சலும், அதிக இலாபமும் பெற்று திருவாரூர் மாவட்ட உணவு உற்பத்தியை பெருக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

மேற்கண்ட இந்த தகவல் திருவாரூர் மாவட்டத்திற்கான தஞ்சை சரக விதைப் பரிசோதனை அலுவலர், து.சிவவீரபாண்டியன், திருவாரூர் விதைப்பரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் கா.புவனேஸ்வரி மற்றும் வேளாண்மை அலுவலர் ரா.அனந்தகுமார் ஆகியோர் தெரிவித்துள்ளார்கள்.




# வேளாண் விஞ்ஞானிகள் விவசாயிகள் கலந்துரையாடல் நிகழ்ச்சி



மதுரை, செப்.16

மதுரை மாவட்டம், வேளாண்மை துறை வேளாண்மை தொழில் நுட்ப முகமை (ATMA) திட்டத்தின் கீழ் வேளாண் விஞ்ஞானிகள் – விவசாயிகள் கலந்துரையாடல் நிகழ்ச்சி நேற்று இரண்டாம் நாள் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நடைபெற்றது. மதுரை வட்டார விவசாயிகள் கலந்து கொண்டு பல்வேறு கேள்விகளை எழுப்பினர். இதற்கு வேளாண் விஞ்ஞானிகள் சுப்பிரமணி, ஜோதிலட்சுமி, செல்வராணி தகுந்த விளக்கமளித்தனர். தேனீ வளர்ப்பு தொடர்பாக முனைவர் சுரேஷ், திட்ட ஒருங்கிணைப்பாளர், விவசாயிகளுக்கு விளக்கமாக எடுத்துரைத்தார். வேளாண்மை துறையின் நடப்பாண்டு திட்டங்களை விவசாயிகளிடம் தெரிவித்து வேளாண்மை இணை இயக்குநர் (பொறுப்பு) ராணி நிகழ்ச்சியை நிறைவு செய்து வைத்தார்.



# எலுமிச்சை மரங்களில் காயங்களுக்கு போர்டோபசை பயன்பாடு குறித்து மாணவர்கள் செயல்விளக்கம்




தென்காசி, செப்.16

தென்காசி மாவட்டம், வாசுதேவநல்லூர் பகுதியில், கிராம தங்கல் திட்டத்தின் கீழ் கலசலிங்கம் பல்கலைக்கழக மாணவர்கள், எலுமிச்சை மரங்களில் ஏற்படும் கிளைக் காயங்களைப் பாதுகாக்கும் வகையில் போர்டோபசை தயாரித்தல் மற்றும் பயன்பாடு குறித்த செயல் விளக்க நிகழ்ச்சியை நடத்தினர். இதில் போர்டோபசையை முறை யாகத் தயாரிக்கும் விதம், எலுமிச்சை மரங்களில் ஏற்பட்ட காயங்களில் அதனைப் பயன்படுத்தும் முறை மற்றும் அதன் பயன்பாடுகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது.

போர்டோபசை தயாரிப்பதற்காக 100 கிராம் காப்பர் சல்பேட் மற்றும் 100 கிராம் நீரேற்றப்பட்ட சுண்ணாம்பு தனித்தனியாக தலா 500 மில்லி லிட்டர் தண்ணீரில் கரைக்கப்பட்டது. பின்னர், இரு கரைசல்களையும் முறையாகக் கலந்து பசை பதத்திற்கு கொண்டு வரும் முறையை மாணவர்கள் நேரடியாகச் செயல்விளக்கமாக செய்து காட்டினர்.

தொடர்ந்து, தயாரிக்கப்பட்ட போர்டோபசையை எலுமிச்சை மரங்களின் கிளைகளில் காணப்பட்ட காயங்களின் மீது சீராகப் பூசும் முறையை மாணவர்கள் செய்து காட்டினர். காயமடைந்த பகுதிகளைப் பாதுகாப்பதிலும், அவற்றின் வழியாக நோய்க் கிருமிகள் உட்புகுவதைக் குறைப்பதிலும் போர்டோ கலவைகள் பயன்படுகின்றன. மேலும், மரங்களில் ஏற்படும் காயங்களை உரிய முறையில் பாதுகாப்பதன் அவசியத்தையும் மாணவர்கள் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர்.

நிகழ்ச்சியின் போது, போர்டோபசை தயாரிப்பில் பயன்படுத்தப் படும் பொருட்களின் அளவு, அவற்றைத் தனித்தனியாகக் கரைக்கும் முறை, இரு கரைசல்களையும் கலந்து பசை தயாரித்தல் மற்றும் எலுமிச்சை மரங்களின் காயங்களில் அதனைப் பயன் படுத்தும் முறை ஆகியவற்றை மாணவர்கள் நேரடியாகச் செய்து காட்டினர். இதன் மூலம் போர்டோபசையைத் தயாரித்து முறையாகப் பயன்படுத்துவதன் நடைமுறை மற்றும் அதன் பயன்கள் குறித்து விவசாயிகளுக்கு தெளிவாக விளக்கப்பட்டது.

# பயிர்க்கழிவு மேலாண்மை முறைகள் மற்றும் இலைகளை எரிப்பதை தவிர்த்தல் குறித்த உள்மாநில அளவிலான விவசாயிகள் பயிற்சி

மதுரை, செப்.16

மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் வட்டாரம், வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் தனிச்சியம் கிராமத்தில் பயிர்க்கழிவு மேலாண்மை முறைகள் மற்றும் இலை களை எரிப்பதை தவிர்த்தல் குறித்த மாவட்ட அளவிலான பயிற்சி சுமார் 40 விவசாயிகள் பங்கேற்புடன் நடைபெற்றது. அலங்கா நல்லூர் வேளாண்மை உதவி இயக்குநர் பெ.தெய்வேந்திரன் பயிர்க் கழிவு மேலாண்மை முறைகள் மற்றும் இலைகளை எரிப்பதை தவிர்த்தல் குறித்தும் அதன் முக்கியத்துவம் குறித்து விளக்கி வரவேற்றார். ஓய்வு பெற்ற வேளாண்மை அலுவலர் குணசேகரன் பேசுகையில் வேளாண்மை பயிர்களில் பயிர்க்கழிவு மேலாண்மை முறைகள், பயிர்க்கழிவு உரமாக்குதல், உரக்குவியல் உருவாக்கம் மேலாண்மை, பயிர்க் கழிவு மறுசுழற்சி முறைகள், தோட்டக் கலை பயிர்களில் உயிர்வாயு உற்பத்தி மேலாண்மை முறைகள், அங்கக இடுபொருட்கள் தயாரிப்பு முறைகள், தென்னை நார்க்கழிவு உற்பத்தி தயாரிப்பு தொழில்நுட்பங்கள், பஞ்சகாவ்யம் தயாரிப்பு, மீன் அமினோ அமில கரைசல் ஆகியவற்றின் தொழில்நுட்ப கருத்துகளை விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். மேலும் இயற்கை வேளாண்மை முறைகளின் முக்கியத்துவம் மற்றும் அதன் பயன்பாட்டு தொழில் நுட்பங்களான அங்கக முறையில் களைக் கட்டுப்பாடு, பசுந்தாள் உரப்பயிர்கள், மஞ்சள் வண்ண அட்டை, சோலார் விளக்குப் பொறி, இனக்கவர்ச்சி பொறி, இயற்கை திரவ உயிர் உரங்களான திரவ அசோஸ் பைரில்லம், பாஸ்போபாக்டீரியா ரைசோபியம் ஆகிய வற்றினை பயன்படுத்தி இயற்கை முறையில் சாகுபடி செய்து அதிக மகசூல் பெற்றிடலாம் என தொழில்நுட்பக் கருத்துக்களை விவசாயி களுக்கு தெளிவாக எடுத்துக் கூறினார். அலங்காநல்லூர் வட்டார வேளாண்மை அலுவலர் மு.வசந்தகுமார், வேளாண் விரிவாக்க மையத்தில் உள்ள இடுபொருட்களின் மானிய விவரங்கள் மற்றும் விவசாயிகளின் தனித்துவ அடையாள எண் பாரத பிரதம மந்திரி கிசான் நிதி திட்டம், நுண்ணீர்ப் பாசன திட்டம், மத்திய மாநில அரசின் மூலமாக கிடைக்கும் மானியத் திட்டங்கள் பற்றி எடுத்துக் கூறினார். உதவி வேளாண்மை அலுவலர் பால் பாண்டி, வேளாண்மைத்துறை மூலம் வழங்கப்படும் மானியத் திட்டங்கள் பற்றியும் விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார்.

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

**Office**
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# சிறு, குறு விவசாயிகளுக்கான பென்சன் திட்டம் தெரியுமா?



சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கான ஓய்வூதிய திட்டம் (PENSION SCHEME) மத்திய அரசால் கடந்த 2019 ஆகஸ்ட் முதல் 'பிரதான் மந்திரி கிசான் மான்தன் யோஜனா' (PMKMY) செயல்பட்டு வருகின்றன. கடந்த 7 ஆண்டுகளாக ஆயிரக்கணக்கான விவசாயிகள் சேர்ந்து தங்களுடைய பிரிமியத் தொகையை செலுத்தி வருவது நாம் அறிந்ததே. இந்த திட்டம் பற்றி விரிவாக பார்ப்போம்.

**பிரதான் மந்திரி கிசான் மான்தன் யோஜனா**

ஆகஸ்ட் 2019யில் நில பதிவேடுகளில் பெயர் உள்ள 18 வயது முதல் 40 வயதுக்குட்பட்ட 2 ஹெக்டேர் வரை சாகுபடி நிலம் வைத்துள்ள அனைத்து சிறு மற்றும் குறு விவசாயிகள் இத்திட்டத்தில் சேரலாம்.

**உறுதியான ஓய்வூதியம் (PENSION) எவ்வளவு?**

விவசாயிகள் 60 வயது நிறைவடைந்த பிறகு, மாதந்தோறும் குறைந்தபட்ச ஓய்வூதியமாக ரூ.3000/- (PENSION) வழங்கப் படும். ஓய்வூதியம் பெறும் விவசாயிகள் காலமானால் அவரது வாழ்க்கை துணைவியருக்கு (SPOUSE) இதில் 50% ரூ.1500 குடும்ப ஓய்வூதியமாக (FAMILY PENSION) மட்டுமே கிடைக்கும். ஆனால் வாரிசுகளுக்கு கிடையாது.

**மாதாந்திர பங்களிப்பு தொகை எவ்வளவு?**

18 வயது முதல் 40 வயது வரை உள்ள விவசாயிகள் இந்த திட்டத்தில் சேரலாம். வயதுக்கேற்ற பிரிமியம் தொகை கூடும். 18 வயதுக்குட்பட்ட விவசாயிகள் மாதாந்திர பிரிமியமாக 55 மட்டும். அது போல 40 வயதுக்குட்பட்ட விவசாயிகளுக்கு மாதாந்திர பிரிமியத் தொகை 200. நாம் செலுத்தும் தொகைக்கு இணையாக, சமமான 50% தொகையை மத்திய அரசும் மாதாந்திர பிரிமியமாக விவசாயிகளின் கணக்கில் வரவு வைக்கிறது.

**வேறென்ன சிறப்பு?**

பணம் செலுத்த நினைவூட்டல்கள் தேவையில்லை. பயனாளிகளின் வங்கி கணக்கிலிருந்து, தானாகவே (AUTO DEBIT) தொகை பிடிக்கப்படும்.

விருப்பமுள்ள விவசாயிகள் தங்களுக்கு கிடைக்கும் பி.எம் கிசான் (PMKISAN) சம்மான் நிதித் தொகையிலிருந்து இப்பங்களிப்பை செலுத்தவும் வழிவகை உண்டு.

**இத்திட்டத்தில் இணைவது எப்படி?**

அருகேயுள்ள பொது சேவை மையத்தினை (CSC) அணுகி ஆதார் அட்டை, நில ஆவணங்கள் மற்றும் வங்கி கணக்கு விபரங்களுடன் எளிதாக பதிவு செய்து இணையலாம்.

வயதான காலத்தில் மாதந்தோறும் உறுதியான ஓய்வூதியம் கிடைக்கும் என்பதால் விவசாயிகள் தங்களுடைய அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்ய உதவும்.

என்ன நீங்களும் பயன்பெற இன்றே சேருங்க.

40 வயதுக்குட்பட்டவர்களே நல்ல வாய்ப்பு,

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# விதையின் ஈரப்பதத்தை அறிந்து சேமிப்பு மேற்கொள்வது அவசியம்

விழுப்புரம், செப்.16

விவசாயிகள் விதைகளின் ஈரப்பதத்தை அறிய அவற்றை பரிசோதனை வேண்டும் என்று விழுப்புரம், விதைப் பரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் ஜெ.சோபனா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது, ஒவ்வொரு பயிரின் விதைக்கும் ஒரு குறிப்பிட்ட ஈரப்பதம் மட்டுமே இருக்க வேண்டும். உற்பத்தி செய்த விதைக்கு விதைச்சான்று பெறுவதற்கும், விதையை சேமிப்பதற்கும் ஈரப்பதம் முக்கிய பங்கு வகிக்கிறது. அதிகபட்ச ஈரப்பதம் ஒவ்வொரு பயிருக்கும் மாறுபடும். நெல்லுக்கு 13 சதவீதமும்,

சிறுதானியத்திற்கு 12 சதவீதமும், பருப்பு வகை பயிர்கள் மற்றும் எண்ணெய்வித்து பயிர் விதைகளுக்கு 9 சதவீதம் என ஈரப்பதம் இருக்கலாம்.

சேமிக்கும் விதையில் குறிப்பிட்ட அளவிற்கு மேல் ஈரப்பதம் இருந்தால் விதை சேமிப்பின் போது பூச்சி நோய் தாக்குதல் ஏற்பட்டு விதையின் முளைப்பு திறன் பாதிக்கப்படும். முளைப்புத்திறன் பாதிக்கப்பட்டால் அந்த விதை விதைப்பதற்கு ஏற்றதாக இருக்காது. எனவே விதையின் முளைப்பு திறனை பாதுகாக்க விதையின் ஈரத்தன்மையை அறிந்து விதைகளை தேவையான ஈர தன்மைக்கு கொண்டு வரவேண்டும். இதன் மூலமே நீண்ட நாட்களுக்கு விதைகளை சேமித்து வைக்க முடியும்.

விதை உற்பத்தியாளர்கள் மற்றும் விவசாயிகள் தங்களிடம் உள்ள விதையின் ஈரப்பதத்தை அறிந்து கொள்வதற்கு விதை குவியலில் இருந்து 100 கிராம் விதை மாதிரியை எடுக்க வேண்டும். அந்த விதைகளை காற்று புகாத பிளாஸ்டிக் பைகளில் அடைத்து பயிர் ரகம், குவியல் எண் ஆகியவற்றை குறிப்பிட்டு விதையின் ஈரப்பதத்தை அறிய பரிசோதனைக்கு அனுப்ப வேண்டும்.

முளைப்புத்திறன் மற்றும் புறத்தூய்மை ஆகிய விதைத் தரங்களை அறிந்து கொள்ள வேண்டிய நிலை இருந்தால் தேவையான அளவு விதை மாதிரிகளை எடுத்து ஈரப்பதம் அறிய வேண்டிய விதை மாதிரியுடன் இன்னொரு பையிலிட்டு பயிர் ரகம், குவியல் என் ஆகியவற்றை குறிப்பிட்டு விழுப்புரம் வேளாண்மை இணை இயக்குநர் அலுவலக முதல் தளத்தில் இயக்கி வரும் விதைப்பரிசோதனை நிலையத்தில் கொடுத்து பகுப்பாய்வு முடிவுகளை அறிந்து கொள்ளலாம் ஒரு விதை மாதிரி ஆய்வுக்கு ரூ.80/- கட்டணம் ஆகும். இவ்வாறு செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ளது.



# உப்புக் கரைசல் முறையில் திராட்சைப் பழங்களின் அடர்த்தி பரிசோதனை

தேனி, செப்.16

ஊரக வேளாண் பணி அனுபவம் மற்றும் வேளாண் தொழில் துறை இணைப்பு (RAWE) திட்டத்தின் ஒரு பகுதியாக, உப்புக் கரைசல் முறையைப் பயன்படுத்தி திராட்சைப் பழங்களின் அடர்த்தி பரிசோதனை என்ற தலைப்பில் ஒரு விரிவான நடைமுறை




செயல்விளக்கம் 15.09.26 அன்று காலை 11.00 மணிக்கு, தேனி மாவட்டம், கம்பம் வட்டாரத்தில் நடைபெற்றது.




இந்நிகழ்ச்சி AEX 421 – Rural Agricultural Work Experience and Agro-Industrial Attachment (0+20) பாடத்திட்டத்தின் கீழ், RAWE மாணவர்களான Lokeshwaran, Mohammed Shiban E.C, Santhosh kumar, Selvakumar மற்றும் Ezhilarasan ஆகியோரின் பங்கேற்புடன் நடத்தப்பட்டது.

இச்செயல்விளக்கத்தின் முக்கிய நோக்கம் திராட்சை விவசாயிகளுக்கு திராட்சைப் பழத்தின் வளர்ச்சி, பழுக்கும் போது ஏற்படும் உடலியல் மற்றும் உயிர் வேதியியல் மாற்றங்கள், அடர்த்தி, மிதத்தல், முதிர்ச்சியை மதிப்பிடுதல், அறிவியல் அடிப்படையிலான அறுவடை மற்றும் அறுவடைக்குப் பிந்தைய தர மேலாண்மை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதாகும். திராட்சை (Vitis vinifera L.) ஒரு முக்கிய வணிகப் பழப்பயிராகும். சரியான அறுவடை முதிர்ச்சியைத் தீர்மானிப்பது திராட்சையின் இனிப்பு, சுவை, தோற்றம், உறுதித்தன்மை, போக்குவரத்துத் திறன், சேமிப்புக் காலம் மற்றும் சந்தை மதிப்பை மேம்படுத்து வதற்கு மிகவும் அவசியமானதாகும். செயல்விளக்கத்தின் தொடக்கத்தில் RAWE மாணவர்கள் விவசாயிகளுடன் கலந்துரையாடி, அவர்கள் திராட்சையின் முதிர்ச்சியை எவ்வாறு கண்டறிகின்றனர் என்பதைப் பற்றி கேட்டறிந்தனர். பழத்தின் நிறம், அளவு, சுவை, இனிப்பு, உறுதித்தன்மை, காய்ப்புக்குப் பிந்தைய நாட்கள் மற்றும் பொதுவான தோற்றம் போன்ற பாரம்பரிய முதிர்ச்சி அறிகுறிகளை விவசாயிகள் பகிர்ந்து கொண்டனர். இதன் மூலம் மாணவர்கள் மற்றும் விவசாயி களுக்கு இடையே இருவழிக் கற்றல் ஏற்படுத்தப்பட்டது.

பின்னர் ஆரோக்கியமான மற்றும் பிரதிநிதித்துவமான திராட்சைப் பழங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, சேதமடைந்த மற்றும் நோயுற்ற பழங்கள் நீக்கப்பட்டன. செயல்விளக்கத்திற்கு ஆரோக் கியமான திராட்சைப் பழங்கள், இரண்டு வெளிப்படையான கண்ணாடிக் குவளைகள், சுமார் 500 மி.லி. சுத்தமான நீர், 80–100 கிராம் சாதாரண உப்பு, கலக்கும் கரண்டி, தட்டு, அடையாளச் சீட்டுகள் மற்றும் சுத்தமான துணி அல்லது டிஷ்யூ ஆகியவை பயன்படுத்தப்பட்டன.

முதல் கண்ணாடியில் சுமார் 500 மி.லி. சாதாரண நீர் நிரப்பப்பட்டு சாதாரண நீர் எனக் குறிக்கப்பட்டது. இரண்டாவது கண்ணாடியில் சுமார் 500 மி.லி. நீரில் 80 – 100 கிராம் உப்பு சேர்க்கப்பட்டு நன்கு கரைக்கப்பட்டு உப்புக் கரைசல் எனக் குறிக்கப்பட்டது. பின்னர் திராட்சைப் பழங்கள் இரு கண்ணாடி களிலும் இடப்பட்டு, அவை மிதக்கின்றனவா, மூழ்குகின்றனவா அல்லது இடைநிலையில் நிற்கின்றனவா என்பதை விவசாயிகள் நேரடியாகக் கவனித்தனர். இதன் மூலம் அடர்த்தி மற்றும் மிதத்தல் பற்றிய அறிவியல் கோட்பாடு எளிய முறையில் விளக்கப்பட்டது. ஒரு பொருளின் அலகு கன அளவிற்கான நிறை அதன் அடர்த்தி எனப்படும். சுற்றியுள்ள திரவத்தைவிட திராட்சைப் பழத்தின் அடர்த்தி அதிகமாக இருந்தால் அது மூழ்கும்; திரவத்தின் அடர்த்தி அதிகமாக இருந்தால் பழம் மிதக்கும். நீரில் உப்பு சேர்க்கும்போது கரைசலின் அடர்த்தி அதிகரிப்பதால், சாதாரண நீரில் மூழ்கும் ஒரு திராட்சைப் பழம் போதுமான அடர்த்தியுள்ள உப்புக் கரைசலில் மிதக்கக்கூடும் என்று மாணவர்கள் விளக்கினர். விவசாயிகள் பழங்களைத் தேர்ந்தெடுத்து, அவை எவ்வாறு நடந்து கொள்ளும் என்பதை முன்கூட்டியே கணித்து, கண்ணாடிகளில் போட்டு நேரடியாகப் பரிசோதனையில் பங்கேற்றனர். இருப்பினும், இந்த உப்புக் கரைசல் பரிசோதனை அடர்த்தி மற்றும் மிதத்தல் பற்றிய கல்வி நோக்கத்திற்கான செயல்விளக்கம் மட்டுமே; இது துல்லியமான திராட்சை முதிர்ச்சிப் பரிசோதனை அல்ல என்பதை மாணவர்கள் தெளிவாக எடுத்துரைத்தனர்.

ஏனெனில் திராட்சை இனம், பழத்தின் அளவு, நீரின் அளவு, திசு அமைப்பு மற்றும் முதிர்ச்சி நிலை போன்ற காரணிகளால் பழங்களின் நடத்தை மாறுபடலாம். மேலும், பழத்தின் அடர்த்தியை நேரடியாக சர்க்கரை அளவு அல்லது ஏயஷெஷ்மு உடன் சமமாகக் கருத முடியாது. தொடர்ந்து, திராட்சைப் பழம் பழுக்கும் போது ஏற்படும் முக்கிய உடலியல் மற்றும் உயிர் வேதியியல் மாற்றங்கள் குறித்து மாணவர்கள் விளக்கினர். ஆரம்ப நிலையில் திராட்சைப் பழங்கள் பொதுவாக பச்சை நிறம், அதிக உறுதித்தன்மை, அதிக அமிலத்தன்மை மற்றும் குறைந்த சர்க்கரை அளவைக் கொண்டிருக்கும். பழுக்கத் தொடங்கும் போது சர்க்கரைச் சேர்க்கை மற்றும் மொத்த கரையக்கூடிய திடப் பொருட்கள் (TSS) அதிகரித்து, அமிலத்தன்மை பொதுவாகக் குறைகிறது; அதேசமயம் இனத்திற்கேற்ற நிறம், சுவை மற்றும் மணம் மேம்படுகின்றன.

வெளிப்புற நிறத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு அறுவடை முதிர்ச்சியைத் தீர்மானிக்கக் கூடாது என்றும், வெவ்வேறு திராட்சை இனங்களில் நிறமாற்றம் மாறுபடுவதால் நிறம் மட்டும் முழுமை யான உடலியல் மற்றும் வணிக முதிர்ச்சியை உறுதி செய்யாது என்றும் விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது. இதனுடன் தொடர்புடைய முதிர்ச்சி மதிப்பீட்டு முறையாக கைமுறை ரிஃப்ராக்டோமீட்டர் (Hand Refractometer) பயன்படுத்தி திராட்சைச் சாற்றின் மொத்த கரையக்கூடிய திடப்பொருட்களை (TSS) °Brix அளவில் கண்டறியும் செயல்விளக்கமும் நடத்தப்பட்டது.

பிரதிநிதித்துவமான திராட்சைப் பழங்கள் மெதுவாக நசுக்கப்பட்டு சாறு எடுக்கப்பட்டது. ரிஃப்ராக்டோமீட்டரின் பிரிசம் சுத்தம் செய்யப் பட்டு, சில துளிகள் திராட்சைச் சாறு அதன் மீது வைக்கப்பட்டு, மூடியை மூடி பொருத்தமான ஒளியை நோக்கிப் பார்த்து °Brix மதிப்பு காண்பிக்கப்பட்டது.


°Brix என்பது திராட்சைச் சாற்றில் உள்ள கரையக்கூடிய திடப்பொருட்களின் அளவை மதிப்பிடுவதற்கான முக்கியமான அளவுகோல் என்றும், ஆனால் சரியான அறுவடை மதிப்பு திராட்சை இனம், சாகுபடி சூழல், பயன்பாடு மற்றும் சந்தைத் தேவைகளைப் பொறுத்து மாறுபடும் என்றும் விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது.

எனவே, அறுவடை முடிவை °Brix, மொத்த அமிலத்தன்மை, சர்க்கரை அமில சமநிலை, பழத்தின் நிறம், சுவை, உறுதித்தன்மை, மணம், விதையின் தன்மை, காம்பிலிருந்து பழம் பிரியும் தன்மை மற்றும் சந்தைத் தேவை போன்ற பல காரணிகளை ஒருங் கிணைத்து எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. சர்க்கரை அமில சமநிலையின் முக்கியத்துவமும் விளக்கப்பட்டது. அதிக அமிலத்தன்மை சுவையைப் பாதிக்கக்கூடும்; அதே நேரத்தில் அதிகமாகப் பழுத்த திராட்சைகள் மிகவும் மென்மையாகி, உடல் சேதம் மற்றும் அறுவடைக்குப் பிந்தைய தரக்குறைவு ஏற்படுவதற் கான வாய்ப்பு அதிகரிக்கலாம்.

திராட்சை முதிர்ச்சியைப் பாதிக்கும் காரணிகளாக இனம், வெப்பநிலை, சூரியஒளி, மழைப்பொழிவு, சார்பு ஈரப்பதம், மண் வகை, மண்ணின் ஈரப்பதம், நீர்ப்பாசனம், ஊட்டச்சத்து மேலாண்மை, கத்தரித்தல், விதான மேலாண்மை, பயிர்ச் சுமை, குலை மேலாண்மை, பூச்சி மற்றும் நோய் தாக்குதல் ஆகியவை விவாதிக்கப்பட்டன. முறையான நீர்ப்பாசனம் மற்றும் விதான மேலாண்மை பழ வளர்ச்சி, சூரியஒளி ஊடுருவல், காற்றோட்டம் மற்றும் தோட்டத்தின் நுண்ணிய காலநிலையைப் பராமரிப்பதில் முக்கிய பங்கு வகிப்பதாக மாணவர்கள் விளக்கினர்.

மேலும், பூச்சி மற்றும் நோய் தாக்குதல்கள் திராட்சைப் பழத்தின் தரத்தையும் சந்தை மதிப்பையும் குறைக்கக்கூடும் என்பதால் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மையின் முக்கியத்துவமும் எடுத்துரைக்கப்பட்டது. சரியான முதிர்ச்சி இல்லாமல் அறுவடை செய்வதால் ஏற்படும் விளைவுகளும் விவசாயிகளுக்கு விளக்கப்பட்டன. முன்கூட்டியே அறுவடை செய்வதால் குறைந்த சர்க்கரை, அதிக அமிலத் தன்மை, குறைந்த சுவை, குறைந்த உணவுத் தரம் மற்றும் சந்தை ஏற்றுக்கொள்ளுதலில் குறைவு ஏற்படலாம். அதேவேளை, தாமதமாக அறுவடை செய்வதால் பழங்கள் அதிக மென்மையடைதல், இயந்திர சேதம் மற்றும் அறுவடைக்குப் பிந்தைய தரக்குறைவு ஏற்படக்கூடும். அறுவடையின் போது குலைகளை கவனமாகக் கையாள வேண்டும் என்றும், பழங்களில் அழுத்தக் காயம், வெடிப்பு, இயந்திர சேதம், காம்பு சேதம் மற்றும் இயற்கையான மெழுகுப் படலம் (Natural Bloom) தேவையின்றி நீக்கப்படுவதைத் தவிர்க்க வேண்டும் என்றும் விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து முறையான தரப்பிரித்தல், வகைப்படுத்தல், பொதியிடல் மற்றும் போக்குவரத்து நடைமுறைகளின் முக்கியத்துவமும் விளக்கப்பட்டது. இச்செயல்விளக்கம் செய்து கற்றல் மற்றும் பார்த்து புரிந்துகொள்ளுதல் என்ற கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்டதால், விவசாயிகள் அடர்த்தி மற்றும் மிதத்தல் தொடர்பான நிகழ்வுகளை நேரடியாகக் கவனித்து புரிந்துகொள்ள முடிந்தது. இச்செயல்பாட்டின் மூலம் விவசாயிகள் அறிவியல் அடிப்படையிலான திராட்சை முதிர்ச்சி மதிப்பீடு, °Brix அளவீடு, அடர்த்தி, மிதத்தல், சரியான அறுவடை மற்றும் அறுவடைக்குப் பிந்தைய கையாளுதல் குறித்து பயனுள்ள அறிவைப் பெற்றனர். அதே வேளையில், யூபுநிசி மாணவர்கள் திராட்சைப் பழ உடலியல், முதிர்ச்சி மதிப்பீடு, விவசாயிகளுடன் தொடர்பு, தகவல் பரிமாற்றம், குழுப்பணி, தலைமைத்துவம், களக் கண்காணிப்பு, தரவு பதிவு, செயல்விளக்கம் மற்றும் வேளாண் விரிவாக்கக் கல்வி ஆகியவற்றில் நடைமுறை அனுபவத்தைப் பெற்றனர். மொத்தத்தில், இச்செயல்விளக்கம் அடிப்படை அறிவியல் கோட்பாடுகளை நடைமுறை திராட்சை சாகுபடியுடன் வெற்றிகரமாக இணைத்து, விவசாயிகளுக்கும் வேளாண் மாணவர்களுக்கும் இடையிலான தொடர்பை வலுப்படுத்தியது.

**விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட முக்கிய செய்தி :** உப்புக் கரைசல் பரிசோதனை திராட்சைப் பழத்தின் அடர்த்தியை விளக்குவதற்கு பயனுள்ளதாகும்; ஆனால் உண்மையான அறுவடை முதிர்ச்சியைத் தீர்மானிக்க °Brix, அமிலத்தன்மை, சர்க்கரை அமில சமநிலை, நிறம், சுவை, உறுதித்தன்மை, மணம் மற்றும் சந்தைத் தேவைகள் போன்ற பொருத்தமான அளவுகோல்கள் ஒருங்கிணைந்து பயன்படுத்தப்பட வேண்டும்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# விதை விற்பனை உரிமம் பெற்ற கடைகளில் மட்டுமே விதைகளை வாங்க வேண்டும் : விதை ஆய்வு துணை இயக்குநர் எச்சரிக்கை!

விருதுநகர், செப்.16

விருதுநகர் மாவட்டத்தில் காரீப் பருவத்தில் பயிரிடும் விவசாயிகள் விதை விற்பனை உரிமம் பெற்ற விற்பனையாளர்களிடம் மட்டுமே விதைகளை வாங்க வேண்டும் என்று விருதுநகர் விதை ஆய்வு துணை இயக்குநர் செ.இராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

தற்போது விதைப்பு பருவத்தில் மக்காசோளம், பருத்தி பயிரிடும் விவசாயிகள் தங்களுக்கு தேவையான விதைகளை வாங்கும் பொழுது தமிழ்நாடு அரசால் விதை விற்பனை செய்ய உரிமம் வழங்கிய விற்பனை நிலையங்களில் மட்டுமே விதைகளை வாங்க வேண்டும். மேலும் விதைச்சட்டம் 1966-ல் குறிப்பிட்ட 14 காரணி களும் அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்த பின்னரே வாங்க வேண்டும். அவ்வாறு விவசாயிகள் விதைகளை வாங்கும் போது விதைப்பையில் உள்ள விபர அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள பயிர், இரகம், காலாவதி நாள், குவியல் எண், அவரவர் பகுதிக்கு ஏற்றவையா என்பவற்றை பார்த்து வாங்க வேண்டும். மேலும், விதைகளை வாங்கும்போது விற்பனை பட்டியலில் (இரசீது) விதையின் இரகம், குவியல் எண், காலாவதி நாள் குறிப்பிடப்பட்டிருக்கிறதா என கண்காணித்து, இரசீது கேட்டு வாங்க வேண்டும்.

மேலும் விதை விற்பனையாளர்கள் உரிமம் பெறாமல் விதைகளை விற்பனை செய்தாலோ, விற்பனை பட்டியல் இல்லாமல் விற்பனை செய்தாலோ, போலி விதைகளை விற்பனை செய்தாலோ நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு மேல் விற்பனை செய்தாலோ சம்பந்தப்பட்ட விற்பனையாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என விருதுநகர் விதை ஆய்வு துணை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

மேலும் பழக்கன்று, தென்னை மற்றும் நாற்றுகள் விற்பனை செய்யும் நர்சரி உரிமையாளர்கள் தவறாமல் விதை விற்பனை உரிமம் பெற்றிருக்க வேண்டும். உரிமம் இல்லாமல் விதை விற்பனை மற்றும் நர்சரி வைத்திருப்பவர்களின் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என விருதுநகர் விதை ஆய்வு துணை இயக்குநர் செ.இராஜேந்திரன் அறிவுறுத்தியுள்ளார்.

# பிளாஸ்டிக் பயன்பாட்டை தவிர்த்தல் மற்றும் வீட்டுத் தோட்டம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திய வேளாண் கல்லூரி மாணவிகள்



ஈரோடு, செப்.16

ஈரோடு மாவட்டம், சென்னிமலை, வேளாண் விரிவாக்க மையத்தில் கிராமப்புற வேளாண் அனுபவத் திட்டத்தின் கீழ் காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழக மாணவிகள் லேகாஸ்ரீ, திரிஷதா, நிஷா பார்ஜோ, ஆனந்தி, நதியா மற்றும் கவி வர்ஷினி ஆகியோர் சென்னிமலை தொடக்கப் பள்ளியில் மாணவர்களிடையே பிளாஸ்டிக் பயன்பாட்டைத் தவிர்த்தல் மற்றும் வீட்டுத் தோட்டம் அமைத்தல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்களைத் தவிர்த்து, துணிப்பை மற்றும் மீண்டும் பயன்படுத்தக்கூடிய பொருட்களைப் பயன்படுத்துவதன் மூலம் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கலாம் என மாணவிகள் விளக்கினர்.

மேலும், வீட்டிலுள்ள குறைந்த இடத்தைப் பயன்படுத்தி காய்கறிகள் மற்றும் கீரைகளை வளர்ப்பதன் மூலம் சத்தான உணவைப் பெறுவதுடன் இயற்கை வளங்களைப் பாதுகாத்து சுற்றுச்சூழலுக்கு உகந்த வாழ்க்கை முறையைப் பின்பற்ற முடியும் என பள்ளி மாணவர்களுக்கு எடுத்துரைத்தனர்.

தலைக் கவசம் உயிர்க் கவசம்

# உப்புத்தன்மை கொண்ட மண்ணை மேம்படுத்துவதில் வேளாண் பொறியியல் முறைகள்

## அறிமுகம்

மண் என்பது வேளாண் உற்பத்தியின் அடிப்படை வளமாகும். ஆனால், மண்ணில் கரையக்கூடிய உப்புக்கள் அதிகமாகச் சேர்வதால் அதன் உற்பத்தித்திறன் படிப்படியாகக் குறைகிறது. இதுவே மண் உப்புத்தன்மை எனப்படுகிறது.



அதிகப்படியான பாசனம், போதிய வடிகால் இல்லாமை, உப்புத்தன்மை கொண்ட நிலத்தடி நீரைப் பயன்படுத்துதல், கடலோரப் பகுதிகளில் கடல் நீர் ஊடுருவல் மற்றும் அதிக ஆவியாதல் போன்றவை மண் உப்புத்தன்மை அதிகரிப்ப தற்கான முக்கிய காரணங்களாகும். உப்புத்தன்மை அதிகரித்த மண்ணில் பயிர்கள் நீரை எடுத்துக்கொள்வது கடினமாகிறது. எனவே, உப்புத்தன்மை கொண்ட மண்ணை மீட்டெடுப்பதில் வேளாண் பொறியியல் மற்றும் மண் மேலாண்மை முறைகளை ஒருங்கிணைத்து பயன்படுத்துவது அவசியமாகிறது.

### உப்புத்தன்மை கொண்ட மண்ணின் நிலை

ICAR-ன் சமீபத்திய தகவலின்படி, இந்தியாவில் சுமார் 6.73 மில்லியன் ஹெக்டேர் நிலங்கள் உப்பால் பாதிக்கப்பட்டுள்ளன. இதில் சுமார் 2.8 மில்லியன் ஹெக்டேர் நிலங்கள் சோடிக் மண்ணாக உள்ளன. இத்தகைய நிலங்களை மீட்டெடுத்து மீண்டும் உற்பத்தியில் கொண்டுவருவது உணவுப் பாதுகாப் பிற்கும் விவசாயிகளின் வருமானத்திற்கும் முக்கியமானதாகும்.

### உப்புத்தன்மை அதிகரிப்பதற்கான முக்கிய காரணங்கள்



அதிகப்படியான மற்றும் முறையற்ற பாசனம், போதிய வடிகால் வசதி இல்லாமை, உப்புத்தன்மை கொண்ட பாசன நீரை நீண்டகாலம் பயன்படுத் துதல், அதிக ஆவியாதல், கடலோரப் பகுதிகளில் கடல் நீர் ஊடுருவல், நிலத்தடி நீர்மட்டம் உயர்தல், மண்ணில் கரையக்கூடிய உப்புக்கள் தொடர்ந்து சேர்தல்.



குறிப்பாக கால்வாய் பாசனப் பகுதிகளில் நீர்க்கசிவு மற்றும் அதிகப் படியான பாசனம் காரணமாக நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து, மண்ணில் உப்புத் தன்மை அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது.

### உப்புத்தன்மை கொண்ட மண்ணை மேம்படுத்தும் வேளாண் பொறியியல் முறைகள்

1. நில சமன்படுத்துதல்

2. மேற்பரப்பு வடிகால்

3. நிலத்தடி வடிகால் முறை

4. உப்புக்களை கழுவுதல் Leaching

5. ஜிப்சம் பயன்படுத்துதல்

6. பண்ணைக் கழிவுகள் மற்றும் இயற்கை உரங்கள்



**சமீபத்திய வழக்குக் கள ஆய்வு – ஜிப்சம் மற்றும் பிரஸ்மட்**

ICAR-Central Soil Salinity Research Institute மேற்கொண்ட விவசாயிகள் பங்கேற்பு ஆய்வு உப்பால் பாதிக்கப்பட்ட நிலங்களை மீட்டெடுப்பதற்கான நல்ல எடுத்துக்காட்டாகும். உத்தரப் பிரதேசத்தின் Hardoi மாவட்டத்தில் உள்ள Santaraha கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட திட்டத்தில், மண் pH 8.5–10.1 வரை இருந்தது. முதலில் வயல் சமன்படுத்துதல், வயல் வடிகால், பாசன வாய்க்கால் மற்றும் இணை வடிகால் போன்ற அடிப்படை பொறியியல் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. பின்னர் மண் பரிசோதனையின் அடிப் படையில் ஜிப்சம் பயன்படுத்தப்பட்டு, சுமார் 10 செ.மீ. நீர் வயலில் தேக்கி வைத்து உப்புக்களை கீழே கழுவினர். அதன் பின்னர் press-mud 10 t/ha அளவில் பயன்படுத்தப்பட்டது. உப்புத்தன்மையைத் தாங்கக்கூடிய CSR-36 நெல் ரகமும் பயிரிடப்பட்டது. மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, ஆரம்பத்தில் பயிரிடப்படாமல் இருந்த அனைத்து நிலங்களும் மீண்டும் சாகுபடிக்குக் கொண்டு வரப் பட்டன. மேலும், மண் சோடிக் தன்மை குறைந்ததால் மகசூல் மற்றும் விவசாயிகளின் வருமானத்தில் முன்னேற்றம் ஏற்பட்டது.

**மற்றொரு முக்கிய வழக்குக் கள ஆய்வு – ஒருங்கிணைந்த தொழில்நுட்பம்**

ICAR-CSSRI, பஞ்சாபின் Patiala மாவட்டத்தில் உள்ள Budhmour மற்றும் Jodhpur கிராமங்களில் உப்புத்தன்மை மற்றும் சோடிக் தன்மை பாதித்த நிலங்களில் ஒருங்கிணைந்த தொழில்நுட்பங் களைப் பயன்படுத்தியது. இந்தப் பகுதிகளில் மண் pH 8.5–9.5 ஆகவும், பாசன நீரில் RSC 3.5–4.1 meq/L ஆகவும் இருந்தது. ஜிப்சம், குறைந்த அளவிலான நில சமன்படுத்துதல், உளி கொண்டு செதுக்குதல் மற்றும் பாசன நீருக்கான ஜிப்சம்-படுகை தொழில் நுட்பம் போன்ற முறைகள் பயன்படுத்தப்பட்டன. ஆய்வில் CSR-36 நெல் சுமார் 4.4 t/ha மகசூலும், Pusa-44 சுமார் 4.0 t/ha மகசூலும் கொடுத்தன. உப்புத்தன்மையைத் தாங்கும் கோதுமை ரகமான KRL-210 சராசரியாக 4.9 t/ha மகசூல் கொடுத்தது. மேலும், ஜிப்சம்-படுகை தொழில்நுட்பம் மூலம் சிகிச்சையளிக்கப்பட்ட பாசன நீரைப் பயன்படுத்திய போது CSR-30 நெல் மகசூல் சுமார் 37% அதிகரித்தது.

### தமிழ்நாட்டிற்கான முக்கியத்துவம்



தமிழ்நாட்டில் குறிப்பாக கடலோர மாவட்டங்கள் மற்றும் நீர்ப்பாசன வசதி அதிகமாக உள்ள பகுதிகளில் மண் உப்புத் தன்மை மற்றும் நீர்த்தேக்கம் முக்கியமான பிரச்சினைகளாக இருக்கலாம். கடல் நீர் ஊடுருவல், நிலத்தடி நீரின் தரம் மற்றும் அதிகப்படியான பாசனம் போன்ற காரணிகளை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். உப்புத்தன்மை அதிகம் உள்ள பகுதிகளில் மண் மற்றும் பாசன நீர் பரிசோதனை செய்து, அதன் அடிப்படையில் வடிகால் அமைப்பு, நில சமன்படுத்துதல், உப்பு கழுவுதல், ஜிப்சம் பயன்பாடு மற்றும் உப்புத்தன்மையைத் தாங்கும் பயிர் ரகங்கள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து செயல்படுத்துவது சிறந்த அணுகுமுறையாகும்.

### விவசாயிகளுக்கான எளிய தீர்வுகள்

மண் பரிசோதனை – நீர் பரிசோதனை – நில சமன்படுத்துதல் – வடிகால் அமைத்தல் – தேவையான ஜிப்சம் – உப்பு கழுவுதல் – கரிமப் பொருட்கள் சேர்த்தல் – உப்புத்தன்மையைத் தாங்கும் பயிர் ரகம் என்ற ஒருங்கிணைந்த அணுகுமுறையைப் பின்பற்றுவது உப்புத்தன்மை கொண்ட மண்ணை மீண்டும் உற்பத்திக்கு கொண்டு வர உதவும்.

**முடிவுரை :** உப்புத்தன்மை கொண்ட மண் என்பது விவசாயத்திற்கு நிரந்தரமாகப் பயன்படாத நிலம் என்ற கருத்து தவறானது. சரியான பொறியியல் மற்றும் மண் மேலாண்மை தொழில்நுட்பங்களைத் தேர்வு செய்தால், பாதிக்கப்பட்ட நிலங்களை மீண்டும் உற்பத்திக்கு கொண்டு வர முடியும். நில சமன்படுத்துதல், மேற்பரப்பு மற்றும் நிலத்தடி வடிகால், கட்டுப்படுத்தப்பட்ட leaching, ஜிப்சம் பயன்பாடு, கரிமப் பொருட்கள் மற்றும் உப்புத்தன்மையைத் தாங்கும் பயிர் ரகங்கள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து பயன்படுத்துவது சிறந்த தீர்வாகும். எதிர்காலத்தில் காலநிலை மாற்றம் மற்றும் நீர்ப்பற்றாக் குறை அதிகரிக்கும் நிலையில், நீர் மேலாண்மை + வடிகால் + மண் சீரமைப்பு + நவீன வேளாண் பொறியியல் ஆகியவற்றின் ஒருங் கிணைந்த பயன்பாடு தமிழ்நாட்டின் உப்புத்தன்மை பாதித்த நிலங்களை பாதுகாப்பதற்கு மிகவும் அவசியமானதாகும்.

**கட்டுரை ஆசிரியர் :** *Er.S.சுகுமார் M.E., உதவி பேராசிரியர், வேளாண்மைப் பொறியியல் துறை, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி. மின்னஞ்சல் : sukumarsubramani2002@gmail.com*



Rithvik Pipe

IS 4985 : 2021 IS 9537

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர்,
  ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக
  பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள்
  கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**